REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 16உ வெள்ளி (2—12—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 17உ சனி (3—12—55) [இதழ் 146

ரஷ்யத் தலைவர்கள் பிரிட்டன் வருகை

சோவியத் தலைவர்கள் புல்கானின், குருஷ்சேவ் ஆகியோர் பிரிட்டன் வரும்போது அவர்களை வரவேற்கும் ஏற்பாடுகளில் தனக்கு உதவுவதற்காக, பல இலாகாக்களின் குழு ஒன்றை தாம் அமைத்திருப்பதாகப் பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

சோவியத் தலைவர்கள் அடுத்த ஏப்ரல் திங்களில் லண்டன் வருவார்கள். நியமிக்கப்பட்டுள்ள வரவேற்புக் குழுவின் தலைவராக வெளிவிவகார இலாகா மந்திரி ரீடிங் பிரபு இருப்பார் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

வெளிநாட்டு-வடநாட்டு சுரண்டல்!

'வடநாட்டவர் பிறப்புரிமையுடன் சுரண்டுகின்றனர்-வெளிநாட்டவர் இந்திய சர்க்கார் தயவை நாடுகின்றனர்'

புதுவையில் நெடுஞ்செழியன் விளக்கம்

"தென்னுட்டில், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாட்டவர்களும் மூலதனம் போட்டு தொழில் நடத்தி, இங்குள்ள மக்களைச் சுரண்டுகின்றனர்; அதேபோன்று மார்வாரி—குஜராத்தி போன்ற வடநாட்டவர்களும் தென்னுட்டைச் சுரண்டுகின்றனர்.

"அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாட்டவர் சுரண்டுவதற்கும், மார்வாரி—குஜராத்தி போன்ற வடநாட்டவர் சுரண்டுவதற்கும் வேறுபாடு உண்டு.

"வெளிநாட்டவர்கள், இந்த நாட்டு மக்களைச் சுரண்டுவதற்கு இந்தியப் பேரரசின் தயவை நாடியாக வேண்டும்; டெல்லி சர்க்காரின் அனுமதியைப் பெற்ருக வேண்டும். இந்தியப் பேரரசு அனுமதி தர மறுத்தால் அந்த வெளிநாட்டவர் இங்கு ஒரு சல்லிக் காசுகூட சுரண்டிச் செல்ல முடியாது. வெள்ளையரும்—அமெரிக்கரும் இங்கு சுரண்டுவது, இந்தியப் பேரரசின் தயவைப் பொறுத்தது.

"ஆனல், இங்கு மார்வாரி—குஜராத்தி ஆகியோர் சுரண்டுகிருர்களே, அது அப்படிப்பட்டதல்ல; மார்வாரிகளும்—குஜராத்தியரும், திராவிடத்தில் பிறப்புரிமை கொண்டாடுகிருர்கள்; அந்த உரிமையுடன் சுரண்டுகிருர்கள்.

இந்த வேறுபாட்டை, சுரண்டல் பற்றிப் பேசுவோர் உணர வேண்டும்.

"இன்று திராவிடம், வடநாட்டவரின் சுரண்டல் காடாகக் காட்சி தந்து வருகிறது.

"அரசியல், பொருளாதாரத் துறைகளில், வடநாட்டவர் தென்னுட்டின்மீது கொண்டிருக்கிற ஆதிக்கத்தின் விளைவாக—'ஏக இந்திய' அரசியல் அமைப்பின் விளைவாக, வடநாடு வளமாக வாழவும், தென்னுடு வறுமையால் தாழவுமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

"இங்குள்ள பாங்கிகள், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் அனைத்தும் மிகப் பெரும்பாலானவை வடநாட்டவரின் ஆதிக்கத்திலிருப்பவையாகும்.

"இங்குள்ள பாங்கிகளில், நம்மிடையேயுள்ள தனிப்பட்டவர்கள் போடும் செல்வம் வடநாட்டவரின் வளத்திற்கே பயன்படுகிறது. எந்த வடநாட்டவரும், தென்னுட்டு மூலதனம் மிகுந்த பாங்கிகளில் வரவு-செலவு வைத்துக்கொள்வதில்லை.

"இவை எல்லாம் பொருளாதார ரீதியாக வடநாட்டவர் கொண்டுள்ள ஆதிக்கத்தின் உருவங்களாகும்.

"அரசியல் துறையில் வடவர் கொண்டிருக்கிற ஆதிக்கத்தின் விளைவுதான், 'கல்கி'யும், 'சுதேசமித்திர'னும் போன்ற தேசிய ஏடுகள்கூடக் கண்டிக்கிற அளவுக்கு தென்னுட்டிற்கு துரோகமிழைக்கப்படும் ஐந்தாண்டுத் திட்டங்கள்,"

—என்று பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புதுவை வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர், திராவிட நாடு பிரிவினையால், உலக உறவு எவ்வகையிலும் கெடாது என்றும், உலகம் ஒன்றுபெருகிறது என்ற கூற்று வெறும் பித்தலாட்டம் என்றும், அப்படி உலகம் ஒன்ருகி வரும் போது திராவிட நாடு கேட்பது குறுகிய நோக்கு என்று கூறுவோருக்கு விளக்கம் தந்தும், திராவிடத்தின் அடிமை நிலை நீங்க திராவிட நாடு அமைய வேண்டியதை விளக்கியும் தெளிவான கருத்துரை ஆற்றினர்கள்.

தோட்டக்காரர்கள் பயிற்சி

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 9 இலட்சம் செலவில் தோட்டக்காரர்களைப் பயிற்றுவிப்பதற்காக 4 முகாம்கள் அமைக்கப்படும் என்று தெரியவருகிறது.

கூடலூர் பற்றியும் பேச இடமுண்டாம்!

எர்ணுகுளம், நவ. 30—

"தேவிகுளம், பீர்மேடு குறித்து பேசுவதற்கு வாய்ப்பிருப்பதைப் போலவே நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் பற்றிப் பேசுவதற்கும் வாய்ப்பிருக்கின்றது; காங்கிரஸ் மேலிடத் தீர்மானம் இந்த வாய்ப்பு இல்லாது போகச் செய்துவிட்டதாகக் கூறுவது தவறு,"

என்று, அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே. பி. மாதவன் நாயர் இங்கு தெரிவித்திருக்கிருர்.

பிரான்சில் பொதுத் தேர்தல் நடைபெறும்?

பாரிஸ், நவ. 30—

பிரெஞ்சு தேசிய சட்டசபையைக் கலைத்துவிட்டு புதியதாகத் தேர்தல் நடத்துவது என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

எட்கார் பாரேயின் சர்க்கார் முன் இரவு வீழ்ந்துபட்டதும், மந்திரி சபையினர்கூடி இந்த முடிவை மேற்கொண்டிருக்கின்றனர். மந்திரி சபையினர் குடியரசுத் தலைவரான ரனே கோடி ஒரு மாதத்திற்குள் புதிய தேர்தலை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கோரியிருக்கின்றனராம்.

பொதுத் தேர்தல்கள்

தேதி நிர்ணயிப்பதற்கில்லையாம்!

"மாநில புது அமைப்புத் திட்டம் குறித்த சர்க்கார் ஒரு முடிவுக்கு வரும் வரை அடுத்த பொதுத் தேர்தலுக்கான ஒரு தேதி நிர்ணயிப்பதற்கில்லை,"

என்று, இந்தியப் பேரரசின் சட்ட மந்திரி விசுவாஸ் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிருர்.

குன்றக்குடிகளார் தலைமையில் பொதுச்செயலாளர்

'குறள் நெறி' குறித்து விளக்கம்

'மோட்சத்திற்கு மக்களை அழைப்பதைவிட மோட்சத்தை இங்கு கொணர வேண்டும்'

குன்றக்குடிகளார் கருத்து

"திருவள்ளுவர் எல்லா நாட்டினருக்கும், எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான வகையில் திருக்குறளைச் செய்திருக்கிருர். ஒவ்வொன்றைப் பற்றியும், 'இதை இப்படிச் செய்தால் நன்ருக இருக்கும்' என்று வரையறுத்துக் கூறுகிருர். 'அறிவு' என்று எடுத்துக்கொண்டால், அது நன்மை செய்யவும் பயன்படும்—தீமை செய்யவும் பயன்படும். 'உண்மை எது—பொய் எது' என்ருல், 'நடந்ததை—இருந்ததை அப்படியே கூறுவது மெய்; நடவாததை—நிகழாததை கூறுவது பொய்; யாருக்கும் தீமை செய்யாதது எதுவோ, அதுதான் உண்மை. இதில், வள்ளுவர் எல்லா அறிஞர்களுக்கும் ஒருபடி மேல் இருந்து, 'பொய்யும் சொல்லு' என்று கூறுகிருர்—'யாருக்கும் தீமை விளைவிக்காது, அதனுல் எல்லோருக்கும் நன்மை உண்டாகுமானுல் பொய் சொல்'—என்று, அதற்கொரு வரையறை கொடுத்துக் கூறுகிருர்.

"பகுத்தறிவு, மனிதனுக்கு மட்டுமல்ல—விலங்கினங்களுக்கும் உண்டு; ஆனுல், விலங்கினங்களுக்குச் சற்று குறைந்த அளவில் இருக்கும். மனிதன், இயற்கை சக்திகளை ஒழுங்கு படுத்தும் சக்தியைப் பெற்றுள்ளான்; ஆகவே, 'ஒழுக்கம்' என்பது, 'ஒழுங்கு' என்பதிலிருந்து வந்தது. மனிதனை விலங்கினங்களிலிருந்தும் பிரித்துக் காட்டுவதுதான் ஒழுக்கம்.

"வள்ளுவர் கூறியபடி நடப்பின், நாட்டில், பொலிவும் வலிவும் ஏற்படும்; ஆகவே, வாழ்க்கையில் தவறு ஏற்படும் போது குறளை நினைவுபடுத்தி, நாட்டின் பொது ஒழுக்கத்தைக் காப்பாற்றவேண்டும்."

—என்று, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், புதுக்கோட்டையை அடுத்துள்ள கடியாபட்டியில், 26—11—55ல், குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற 'குறள் விழா'வின் மூன்ருவது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

வீடு கட்டும் திட்டம்

ரூ. 120 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, நவ. 30—

இன்னும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை என்ருலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கென ரூ. 120 கோடி வரை ஒதுக்கப்படும் என்று, தொடர்புடைய இலாகா மந்திரி சர்தார் சுவரண் சிங், மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிருர்.

இது முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைப்போல மூன்று மடங்காகும் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

பீகார் ஆர்ப்பாட்டக்காரர்கள் வெற்றி

முதன் மந்திரி தங்களைச் சந்திக்கச் செய்தனர்

மாநிலக் குழு சிபாரிசுக்கு எதிர்ப்பு

பாட்ணு, டிச. 1—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் சிலவற்றை எதிர்த்து, பீகார் சட்டசபை முன் கூடி 5,000 பேர் வரை ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

பீகாரில் உள்ள மான்பும், புரேணு மாவட்டங்களின் பூருலியா, கிஷன்கஞ்ச் வட்டங்களை மேற்கு வங்கத்துடன் இணைக்க வேண்டும் என்ற குழுவின் சிபாரிசுகளுக்கு எதிராக அந்த ஆர்ப்பாட்டத்தை பீகார் சங்கம் நடத்திற்று.

ஆர்ப்பாட்டக்காரர்கள், 'முதன் மந்திரியைப் பார்க்கவேண்டும்'

(4-ம் பக்கம் பார்க்க)

வடநாட்டிற்கும் — தென்னுட்டிற்குமுள்ள வேறுபாடு

இந்தியப் பேரரசின் தொழில் மந்திரி தட்டிக்கழிக்கிருர்

புதுடில்லி, நவ. 30—

தென்னுட்டிலும்—வடநாட்டிலும் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் வருமானத்தில் உள்ள வேறுபாடுகளை, திட்டக் குழுவின் கவனத்திற்கு தமது இலாகா கொண்டுவந்திருப்பதாக, உதவி தொழிலாளர் மந்திரி மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிருர்.

இரண்டாம் திட்டம் தயாரிக்கப்படும்போது இது கவனத்தில் கொள்ளப்படும் என்று தாம் நம்புவதாயும் அவர் தெரிவித்திருக்கிருர்.

"இந்த வேறுபாடுகளைப் புறக்கணித்துவிட்டு, பின்தங்கிய தென் மாநிலங்களைக் காட்டிலும், முன்னேறியுள்ள வடநாட்டு மாநிலங்களுக்கு அதிகமான தொகையை திட்டக் குழு ஒதுக்குமானுல் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

என்று சுரேந்திரமகந்தி என்பார் கேட்டார்.

"இதனைத் திட்டக் குழுவிடம் தான் முறையிட வேண்டும்,"

என்று, தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் தெரிவித்திருக்கிருர்.

சட்ட விரோதமான சாமான்கள்

புதுடில்லி, டிச. 1—

சட்ட விரோதமான சாமான்கள் வைத்திருப்பதைத் தடுப்பதற்கான 'இரயில்வே ஸ்டோர் சாமான்கள்' மசோதா' தனிக் குழு ஒன்றின் சிபாரிசுகளுடன் டில்லி ராஜ்யங்கள் சபையில் நிறைவேறியிருக்கிறது.

இம்மசோதா, சட்ட விரோதமாகச் சாமான்கள் வைத்துக் கொண்டிருப்போருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்க அதிகாரம் அளிக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—12—'55 வெள்ளி

பெருவிருந்து!

சோவியத் தலைவர்கள் புல்காவின், குருஷ்சேவ் ஆகியோர் சென்ற திங்கள் இறுதியில் சென்னை வந்து, இலட்சக் கணக்கான மக்களின் உளங் கனிந்த வரவேற்பையும், வாழ்த்துக்களையும் பெற்றுச் சென்றனர்.

அந்தத் தலைவர்கள் சென்னைக்கு வருகைதந்ததை ஒட்டி, மாநில கவர்னர் 'ராஜ பவன்'த்தில் ஒரு பெருவிருந்து நடத்தி, அந்தத் தலைவர்களை உபசரித்திருக்கிறர்.

அந்தப் பெருவிருந்திலும், நகரில் நடைபெற்ற இதர வரவேற்பு வைபவங்களிலும், மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள் 'வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டதாக' மேல் சட்ட மன்றத்தில் உறுப்பினர் ஒருவர் சர்க்கார் மீது குற்றஞ் சுமத்தியதும், அதற்கு சர்க்கார் சார்பில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பதில் கூறியதும் செய்திகளாகக் கிடைத்தன.

சட்ட மன்ற உறுப்பினர்களை வேண்டுமென்றே புறக்கணிக்கவில்லை என்றும், விருந்து நடத்தியவர் கவர்னர் என்றும், யார் யாரை விருந்துக்கு அழைப்பது என்ற பட்டியலை கவர்னர் பெருமானே தயாரிப்பதாயும் நிதிமந்திரி சுப்பிரமணியம் சமாதானம் கூறியிருக்கிறர்.

விருந்து நடத்துவது கவர்னர்தான் என்ருலும், அந்த விருந்திற்கு செலவாகும் பணம் சர்க்காராலேயே தரப்படுகிறது என்று, குற்றஞ் சுமத்திய உறுப்பினர் எடுத்துக் காட்டியிருக்கிறர்.

சோவியத் தலைவர்களுக்காக நடத்தப்பட்ட பெரு விருந்தில் சுமார் 300-க்கும் அதிகமான பேர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர்; ஆனல், சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அழைக்கப்படவில்லை. மொத்தமாக, பத்து அல்லது பன்னிரண்டு உறுப்பினர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருக்கின்றனர். விருந்தில் கலந்து கொண்ட இதரர்கள் எல்லாம், 'மிக முக்கியமான மனிதர்கள்' என்று கருதப்படுபவர்களாம்.

இந்தச் சாரங்களும், மந்திரியின் சமாதானத்தில் காணக் கிடக்கின்றன.

காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த சிலரையும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சிலரையும் மட்டும் அழைத்தால் போதுமென்று நினைத்தார்களாம்—முதன் மந்திரியும், இதரரும். இந்த இரு கட்சியினரும், சட்ட சபைக் கட்சியினர் என்பதற்காக அல்ல அழைத்தது—ஸ்தாபன ரீதியாக அழைக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்காக அழைத்தார்களாம். அப்படி ஒரு பெரும் 'புதிரை'யும் தெரிவித்திருக்கிறர், மந்திரி.

ஜனநாயக முறையில் அமையும் ஒரு ஆட்சியின் தூண்களே சட்டமன்ற உறுப்பினர்கள் தாம்.

அவர்களது மக்களின் பிரதிநிதித்துவத் தகுதிதான், நாட்டில் இதரருக்கிருக்கும் வேறு தகுதிகளைவிடச் சிறந்ததும், மதிப்புமிக்கதுமாகும் — இப்போதுள்ள ஜனநாயக மரபுப்படி!

மந்திரிகள், பொறுப்புகளை நிறைவேற்றுகிற அதிகாரம் படைத்தவர்கள் — அதற்கான சம்பளம் பெறுபவர்கள் என்ற நிலையிருந்தாலும், அவர்களது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும், சட்டமன்ற உறுப்பினர்களில் பெருவாரியானேரின் அங்கீகாரம் பெற்றதாகவே கருதப்படும். சட்ட மன்றம்தான், ஜனநாயக அரசு முறையின் உயர் அதிகாரம் பெற்ற அங்கம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அத்தகு சட்ட மன்ற உறுப்பினர்கள், கவர்னர் பெருமான் கண்களுக்கு 'மிக முக்கியமானவர்'களாகப்படாதது ஆச்சரியத்திற்குரியதாகும்!

இப்போது, கவர்னர் பெருமானின் கண்களில் முக்கியமானவர்களாகப்படுகிற எவரது எந்த ஒரு குறிப்பிட்ட தகுதியிலும், சட்ட மன்ற உறுப்பினர்களின் மக்களின் பிரதிநிதித்துவத் தகுதி குறைவானது என்று, நியாயம் உணர்ந்தோர் கூறமாட்டார்கள்.

சில நூறு பேர்கள் மிக முக்கியமானவர்கள் என்று கருதப்பட்டு, அழைக்கப்படும் விருந்தில், மேலும் இரண்டு, மூன்று நூறு சட்ட மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதினல் பெரு விருந்திற்கு உள்ள முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று கொள்வதற்கு இல்லை. 'செலவு அதிகமாகக் கூடும்' என்று சர்க்கார் சமாதானம் கூற முற்படுமானல், ஏற்பாடு செய்யப்படும் விருந்தின் 'தர'த்தை சற்றுக் குறைத்தால், கலந்துகொள்வோர் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள முடியும்.

மேலும், ஆண்டொன்றுக்கு பத்து இலட்சம் ரூபாய் வரையில் பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து வாரிச்செலவும் கவர்னர், தான் நடத்தும் விருந்திற்கு தனக்குப் பிரியமானவர்களை, வேண்டியவர்களை அழைத்துக்கொள்வதானலும், விருந்திற்காகும் செலவைத் தருகிற பொதுமக்களின் பிரதிநிதிகளையும், பொதுமக்கள் மன்றத்தில் செல்வாக்குப் பெற்றவர்களையும், தனக்குப் பிடிக்காதவர்கள் என்ற காரணத்திற்காகவே ஒதுக்கிவிடுவதை பொதுமக்கள் சரியென ஒப்பமாட்டார்கள் என்பதையும் உணர வேண்டும்.

சோவியத் தலைவர்களுக்குத் தரப்பட்டதைப் போன்ற வரவேற்பு வைபவங்களில், கூடிய வரை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டால்தான், அது மக்களின் சார்பில் தரப்படுகிற வரவேற்பாயும், விருந்தாயும் இருக்க முடியும். சிறப்பும், தகுதியும் படைத்த தனிப்பட்டவர்கள் அழைக்கப்படும்போது சட்டமன்றங்களில் வீற்றிருப்போரும் கட்டாயம் அழைக்கப்படுபவர்களாயிருத்தல் வேண்டும்.

எதிர்காலத்தில் இத்தகு வரவேற்பு வைபவங்களை நடத்தும் போது எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களையும் கூட்டி வைத்து, வைபவங்களுக்கு யார் யாரை அழைப்பது என்று விவாதித்து முடிவு செய்யலாம் என்று சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியபடி, செயலாற்ற வேண்டும்.

பிரிட்டிஷ் மக்கள் சபையில் குழப்பம்!

சோவியத் தலைவர்கள் இந்திய வருகை பற்றி கொதிப்பு

லண்டன், நவ. 30—

"இந்தியாவிற்கு சோவியத் தலைவர்கள் புல்கானின் குருஷ்சேவ் முதலானேர் சென்றிருப்பது பெரும் வெற்றியாக இருக்கும் போல் தெரிகிறது……"

என்று, தொழிற் கட்சி இடதுசாரி உறுப்பினர் ஒருவர் பிரிட்டிஷ் மக்கள் சபையில் பேசிக்கொண்டிருக்கும்போது, கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் 'வாயை மூடு,' 'கீழே உட்கார்' என்றெல்லாம் குரல் கொடுத்து குழப்பம் உண்டாக்கினர்களாம்!

இந்தக் குழப்பத்தினல், அந்தத் தொழிற் கட்சி உறுப்பினர், தனது உரையை முழுவதுமாக நிகழ்த்த முடியாது போய்விட்டது.

பின்னர் அவர் இருமுறை முயன்று, சபைத் தலைவரின் தலையீட்டின் பேரில்தான் தொடர்ந்து பேச முடிந்தது; அப்போது அவர் குறிப்பிட்டார்:—

"இந்தியாவிற்கு ரஷ்யத் தலைவர்கள் சென்றிருப்பது, இந்தியா—ரஷ்யா ஆகியவற்றிடையே நட்புறவையும், வர்த்தகத் தொடர்பையும் விரிவாக்குவதாயிருக்கும்,"

அணு ஆயுதப் பரிசோதனை

ரஷ்யாவின் யோசனை குறித்து பிரிட்டன் கருத்து

லண்டன், நவ. 30—

"'அமெரிக்காவும், பிரிட்டனும் சம்மதித்தால், அணு ஆயுதப் பரிசோதனைகளைத் தடை செய்துவிடத் தயார்' என்று ரஷ்யா கூறியிருக்கிற இந்த யோசனையை, அண்மையில் நீர்வளிக் குண்டொன்றை அது வெடித்துச் சோதனை நடத்திய தற்குமுன்னமேயே தெரிவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும்;"

என்று, பிரிட்டிஷ் மக்கள் சபையில், 'ரஷ்யாவின் யோசனை குறித்து ரஷ்யாவுடனும்—அமெரிக்காவுடனும் பிரிட்டன் பேச்சுவார்த்தைகள் நடத்துமா?' என தொழிற்கட்சித் தலைவர் அட்லி கேட்டபோது, பிரிட்டன் பிரதமர் ஈடன் கூறியிருக்கிறர்.

"இது பற்றிப் பேச பிரிட்டன் எப்போதும் தயாராகவே இருக்கிறது. எத்தகைய சோதனைகள் எத்தனை நடைபெற்றுள்ளன—இதுவரை எவ்வளவு சோதனைகள் நடைபெற்றுள்ளன என்ற விவரங்களையும் அத்தகு பேச்சுவார்த்தைகளின்போது கவனிக்கவேண்டும். இப்பிரச்சினைக்கான நிரந்தரப் பரிகாரமெல்லாம் விரிவான ஆயுதக் குறைப்பு ஒப்பந்தமேதான் என்பதே பிரிட்டனின் கருத்து" என்றும் பிரிட்டன் பிரதமர் கூறியிருக்கிறர்.

அவர் மேலும் இதுபற்றிக் குறிப்பிடுகையில், ரஷ்யாவின் இந்த யோசனையை இந்தியப் பிரதமர் நேருவும் மிகப் பிரமாதமாகப் பேசியிருக்கிறர் என்றும், ரஷ்யப் பிரரேபனையின் உண்மைத் தன்மைபற்றிய விவரங்கள் எதுவும் இன்னும் தெளிவாகத் தெரியவில்லையென்றும், இது சம்மந்தமான எந்த யோசனையும் சோவியத் சர்க்காரிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் கூறியிருக்கிறர்.

ஆசிரியர்களாக ஆசைப்பட்டார்களாம்!

'பார்மோசா, ஐரோப்பாவில் இருக்கிறது.'

'ஆந்திர மாநிலத்தில் அசெம்பிளி, மேல் சபை ஆகிய இரண்டு சட்ட சபைகள் இருக்கின்றன.'

'லோக் சபா' என்பது இந்தியாவிலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகளுள் ஒன்று.'

'ஆந்திரா என்பது ஒரு ராஜ்யம்; அது, பிரிந்ததுபோக எஞ்சியுள்ள ராஜ்யம்.'

'சீனவுக்கும் — ரஷ்யாவிற்கும் இடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.'

'ஜிப்ரால்டர் ஆப்பிரிக்காவில் இருக்கிறது; அது பிரான்சுக்குச் சொந்தமானது.'

'பெப்சு(PEPSU) என்பது ஒரு இருமல் மாத்திரை.'

'கெடுபிடிப் போர்' என்பது ஒருவரையொருவர் ஏசிப் பேசித் தாக்குவது.'

'சுடோனிம்' (புனைபெயர்) என்பது, அணுகுண்டுகளில் பயன்படுத்தப்படும் ஒருவகை உலோகம்.'

'கோரம்' (Quorum-சபைகளில் உறுப்பினர்களின் எண்ணிக்கை) என்பது, பாபருக்குள்ள மற்ருெரு பெயர்; (2) முஸ்லிம்களுடைய வேத புத்தகம்; (3) மேரி க்யூரி அம்மையாரால் காச நோய்க்குக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்து.'

'மன்ரோ கொள்கை(Manroe Doctrine) என்பது ஒரு நாட்டு மருந்து.'

'அசோகன் ஒரு முகலாயச் சக்கரவர்த்தி.'

ஆந்திரா பொதுப் பணித் தேர்வுக் குழு நடத்திய போட்டிப் பரீட்சைகளில் கலந்து கொண்ட மாணவர்கள், பொது அறிவுத் துறை கேள்விகளுக்குத் தந்திருக்கும் விடைகள்தான் மேலே தரப்பட்டிருக்கின்றன!

"மாணவர்கள் என்ருல், சாதாரண நடுநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்கூட அல்ல; ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் பயிலும் கல்லூரி மாணவர்கள்—அதிலும், குறிப்பாக, சரித்திர பாடத்தைப் பயின்று 'ஆனர்ஸ்' பட்டமும் பெற்ற 'பட்டதாரிகள்'!

"ஆந்திர சர்க்கார் கல்வி இலாகாவில் உதவி 'லெக்சரர்' (ஆசிரியர்) பதவிக்காக நடைபெற்றப் போட்டிப்பரீட்சைகளில் கலந்து கொண்ட மாணவர்கள்தான் இந்தப் பதில்களைத் தந்திருக்கின்றனர்,"

என்று, ஆந்திர பொதுப் பணித் தேர்வுக் குழுவின் 1954—55-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை குறிப்பிடுகிறது!

"பரீட்சையில் கலந்துகொண்ட கல்லூரிப் பட்டதாரிகள் பெரும்பான்மையினருக்கு, சாதாரண உயர்நிலைப் பள்ளி மாணவன் ஒருவனுக்குத் தெரிந்திருக்கக் கூடிய ஆங்கில அறிவு கூடக் காணக் கிடைக்கவில்லை" என்று அந்த அறிக்கை மேலும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

அறிக்கை இத்துடனும் நின்றுவிடவில்லை; மாணவர்களின் அறிவுத் துறையின் பரிதாபகர நிலையை இன்னும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

'பொருளாதாரத் துறையில் பயின்று வரும் ஒரு மாணவருக்கு, இந்தியாவில், ஐந்தாண்டுத் திட்டம் என்று ஒரு திட்டம்இருப்பதாகவே தெரியவில்லை என்றும், இன்னொரு மாணவர் கார்ல் மார்க்சைப் பற்றிக் கேள்விப்பட்டதே கிடையாது என்றும் அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்,' என்பது, 'ஐந்தாண்டுத் திட்டத்திலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டம்,' என்று, பொருளாதாரத் துறைப் பயிற்சி பெறும் மற்ருெரு மாணவர் பதில் எழுதியிருக்கிறராம்.

'சோஷியல் ஆர்கனைசர்' என்பாரது வேலைகள் குறித்து, ஒருவர் தமது கருத்தைத் தெரிவிக்கையில், 'பொருளாதாரத் திட்டங்களைத் தொடர்ந்து வேலை செய்வதுதான் அவரது வேலை' என்று கூறியிருக்கிறர்.

ஆங்கில மொழி 'ஆனர்ஸ்' வகுப்பு மாணவர் ஒருவர். 'என்டெமிக்' எனும் ஒருவகை நோயை, 'ஒருவரை மற்ருெருவர் பிடித்துக் கொள்வது' என்றும், அதே வகுப்பு மற்ருெரு மாணவர், 'சமுதாயத்துடன் ஒன்றி வாழ்பவன்' என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்!

மாணவர்களது அறிவுத் திறன் குறித்த அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"தங்களுடைய சொந்த மாவட்டங்கள், பகுதிகளிலுள்ள பூகோள, பொருளாதார, தொழில் துறை முக்கியத்துவங்களைக்கூட பெரும்பாலான மாணவர்கள் தெரிந்துகொண்டிருக்கவில்லை. செய்தித்தாள்கள் படிக்க வேண்டும் என்ற ஆர்வமோ, எண்ணமோ, நாட்டில் இன்றைய நாட்களில் மேற்கொள்ளப்படுகிற அபிவிருத்தித் திட்டங்களில் தாங்களாகவே கவனம் செலுத்த வேண்டுமென்ற எண்ணமோ சிறிதளவும் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

'லெக்சரர்' வேலைகளுக்காகப் பரீட்சை எழுதிய மாணவர்கள் பெரும்பாலானேருக்கு சரியான முறையில் ஆங்கில மொழி பேசத் தெரியவில்லை. எழுதும் போதும், பேசும் போதும், இறந்த காலம்-நிகழ் காலம்-எதிர் காலம் ஆகியவற்றை எப்படி உபயோகிப்பது என்றே தெரியவில்லை! பெரும்பாலும் ஆந்திர பல்கலைக் கழகத்திலிருந்து வந்துள்ள கல்லூரி மாணவர்கள் சாதாரண எஸ். எஸ். எல். சி. மாணவன் தவிர்த்துக்கொள்ளக் கூடிய சிறு பிழைகளைக்கூட அவர்கள் செய்துவிடுகின்றனர்."

'ஸ்டாலின்கிராடைக் காப்பாற்றிய வீரர்கள்'

கல்கத்தா தொழிலாளர்களுக்கு குருஷ்சேவ் பாராட்டு

இந்தியாவிலேயே மிகப் பெரியதான ஹௌரா சணல் ஆலைக்கு சோவியத் தலைவர்கள் சென்ற போது, அந்த ஆலையிலிருந்துதான் சணல் 'கான்வஸ்'கள் தயாரிக்கப்பட்டு, இரண்டாம் யுத்தத்தின் போது ஸ்டாலின்கிராட் பாதுகாப்பிற்காக இராணுவ முகாம்கள் அமைக்க அனுப்பப்பட்டன என்று விளக்கப்பட்டது.

இதைக் கேட்ட குருஷ்சேவ், 'அந்த ஆலைத் தொழிலாளர்கள் ஸ்டாலின் கிராட் நகரைக் காப்பாற்றிய வீரர்கள்' என்று பாராட்டுதல் தெரிவித்திருக்கிறர்.

இரண்டாம் யுத்தத்தின்போது, ஸ்டாலின்கிராட் நகர் பாதுகாப்பிற்காக, இந்த ஆலை சுமார் 18 கோடி கெஜம் சணல் 'கான்வஸ்' தயாரித்து அனுப்பித் தந்ததாம்.

பாரிசில் கதிரியக்கப் பொடிகள்

பாரிஸ், நவ. 28—

கடந்த சனியன்று கதிரியக்கப் பொடிகள் காற்றில் மிகுந்திருந்ததாக, இங்குள்ள நகர சபை பரிசோதனை நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறர்.

இந்த நிலைக்குக் காரணம், சில நாட்களுக்கு முன்பு சோவியத் வெடித்த நீர்வளிக்குண்டுதானு என்பதைக் கூற அந்த அதிகாரி மறுத்துவிட்டாராம்.

தென் இந்திய இரயில்வே 'லோன் சொசைடி' தேர்தல்

விளக்கமும் - வேண்டுகோளும்-[3]

பொன்மலைத் தோழர்கள் கே. ஏ. சூசையப்பன், வி. இராமானுஜாச்சாரி, டி. சச்சிதானந்தம், திருஞானசம்பந்தம், எம். கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரன் ஆகியவர்களும், திருச்சித் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஜி. இராமச்சந்திரன், எம். முஸ்தாபா உசேன், சி. ஜோசப், ஆர். நாராயணசாமி ஆகியவர்களும் கீழ்க்காணும் வேண்டுகோளை விடுத்துள்ளனர் :—

யூனியன் சார்புள்ளவர்களாலும், சார்பற்றவாகளாலும் ஜனநாயக அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட நண்பர்கள் (வாக்குச் சீட்டிலுள்ள வரிசை எண்களின்படி) :—

9. கே. கே. எம். பணிக்கர், டி டி. எஸ். ஆபீஸ், திருச்சி

10. எம். நல்லப்பன், சீனியர் கிளார்க், எஸ்டாபிளிஷ்மெண்ட் அக்கௌண்ட்ஸ், திருச்சி.

11. பி. ஜெயராஜ், மோல்டர், டி. எஸ். டி ஈ ஒர்க்ஷாப், திருச்சி

12 எஸ். எம். முகம்மது ஹனீபு, பவர் பிரஸ் ஆபரேடர், மெக்கானிகல், பொன்மலை.

13. டி. குழந்தைசாமி, மார்க்கர், மெக்கானிகல், பொன்மலை.

14. ஏ. தங்கவேலு பிள்ளை, அசிஸ்டெண்ட் மாஸ்டர், ரயில்வே உயர்நிலைப் பள்ளி, பொன்மலை.

15. என். ராஜேந்திரன், கிளார்க், அக்கவுண்ட்ஸ், பொன்மலை.

லேபர் யூனியன் சார்பில் ஏழு பேர் டைரக்டர்கள் தேர்தலுக்காக நிறுத்தப்பட்டனர். ஏற்கனவே இருந்த ஏழு டைரக்டர்களில் ஒருவரை மட்டும் நீக்கிவிட்டு, இன்னொருவரைச் சேர்த்து பட்டியல் வெளியிட்டனர். நீக்கப்பட்ட தோழருக்கு நம்முடைய மனப்பூர்வமான அனுதாபங்கள் !

பழைய டைரக்டர்கள் என்ன தவறு செய்தார்கள் எனக் கேட்கும் நண்பர்கள், நீக்கப்பட்ட டைரக்டர் என்ன தவறு செய்தார்—எதற்காக ஒதுக்கப்பட்டார் என்பதை மட்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

ஜனநாயக உரிமையைப் பறிக்கச் சதித் திட்டம்

29—10—55ந் தேதி அன்று சொசைட்டி தேர்தல் என அறிவிக்கப்பட்டதும், இஸ்லாமிய நண்பர்களும், திருச்சி ஜங்ஷன் குமாஸ்தாக்களும் தேர்தல் தேதியை மாற்றவேண்டினர்.

'(மிதுலான் நபி) நபி நாயகம் (சல்) பிறந்ததின விழாவன்று தேர்தலை நடத்தாதீர் ; எங்களால் வர முடியாது,' என, இஸ்லாமியர்கள் வேண்டினர் ; 'விடுமுறை நாளில், வேறு வேலைகளைக் கவனிக்க இடங்கொடுங்கள்.' எனக் காரியாலய குமாஸ்தாக்கள் கேட்டுக் கொண்டனர் ; நூற்றுக்கணக்கான கையெழுத்துக்கள் கொண்ட வேண்டுகோள்கள் அனுப்பப்பட்டன.

ஒரு டைரக்டராவது தங்களை வேண்டிக்கொண்ட பங்குதாரர்களுக்குப் பதில் சொல்லவேயில்லை. தேர்தல் அதிர்ச்சி காரணமாக நோட்டீசுகளும், அறிக்கைகளும், ஆதரவுகளும் தேட முனைந்திருக்கும் எந்த டைரக்டருக்கும், அப்போது, 'நாம் பங்குதாரர்கள் தயவில் வாழ்பவர்கள் என்ற எண்ணமே பிறக்கவில்லை ; 'வழக்கமான குழப்பம், கூச்சலைக் கொண்டே வெற்றி பெற்றுவிடலாம்,' என்று இறுமாந்திருந்தனர். நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டவுடன் பங்குதாரர்களை பணிவோடு வேண்டவும், சாதித்தவைகள் என்ன என்பதை விளக்கவுமான அளவுக்கு இறங்கிவந்திருக்கின்றனர். எப்போதும்போல, 'லேபர் யூனியனை'க் கொண்டே நோட்டீஸ் போடாமல், தனிப்பட்டோர் வேண்டுகோள்விடும் நிலையேற்பட்டதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்தால்தான் புரியும். இன்று ஏமாந்தால் வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறிவிடும்!

'பத்து பூத்துகள் வரை ஏற்பாடு செய்யவேண்டும்—29-10-55 அன்றைய தேர்தலுக்கு'—என்று அனுப்பிய மனுக்கள் என்ன ஆயின ? ஏன் ஏற்பாடு செய்யவில்லை ? 'லேபர் யூனியனு' இந்த ஏற்பாடுகளைச் செய்யும் ? தோழர்கள் நம்பியாரும், கல்யாணசுந்தரமுமா பங்குதாரர்கள் மத்தியிலே உலவும் உரிமை பெற்றவர்கள்?

'குறைவான ஆட்களைத்தான் எதிர்பார்த்தோம்' என்று இவர்களால் கூறமுடியாது. 1953-ம் ஆண்டில், சொசைட்டி செயலாளர் கைதூக்குதல் முறைக்கு அனுமதி கோரி, கூட்டுறவு இலாகாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'ஆண்டுக்கு ஆண்டு அதிகமான பங்குதாரர்கள் கலந்துகொள்கிறார்கள்,' என்பதைத் தெரிவித்திருக்கிறார்.

டைரக்டராக இருந்தவர்களுக்கு இது தெரியாமலா போனது ? எதெதற்கோ கூச்சல் போடும் இவர்கள், இந்த நல்ல காரியத்தைச் செய்யவும், அதற்காகப் போராடவும் ஏன் முன்வரவில்லை ? பங்குதாரர்களிலே பெரும்பாலோர் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பவர்கள் ; வோட்டுப் போடுவது என்று ஆரம்பித்தால் இவர்கள் சீட்டுக் கிழிந்துவிடும் என்பதைத் தவிர வேறென்ன காரணமாக இருக்க முடியும் ?

28—10—55 அன்று இரவு 7 மணிக்கு, நிறைய 'ஷேர் சர்ட்டிபிகேட்'டுகளைச் சில டைரக்டர்கள் கையில் சொசைட்டி செயலாளர் கொடுத்தனுப்பியதாகப் பங்குதாரர்களில் சிலர் நோட்டீசு போட்டிருக்கின்றனர். கடைசி நேரத்தில் இத்தனை 'ஷேர் சர்ட்டிபிகேட்டு'கள் ஏன் வாங்கப்பட்டன ? எப்படிப் பயன்பட்டன அந்த ஷேர் சர்ட்டிபிகேட்டுகள்—என்பது இதுவரை வெளியாகவில்லை.

29—10—55 அன்று 6,000-க்கு மேற்பட்ட பங்குதாரர்கள் வந்திருந்தனர். பங்குதாரர்களாக இருப்பவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லி அழைத்து வந்திருந்தோம். உழைப்பு, பணம், நேரம் மூன்றும் வீணானதுதான் மிச்சமே தவிர, உருவான பலன் ஏற்படவில்லை. இரவு 7 மணி ஆகியும் அடையாளச் சீட்டுகள்கூடக் கிடைக்காமல் பல பங்குதாரர்கள் திண்டாடினர்.

ஒரே ஒரு 'பூத்' மட்டும் வைத்திருந்தனர் அவர்கள் கணக்குப்படி ஒரு மணி நேரத்தில் 500 பேரால்தான் 'ஓட்' போட முடிந்தது. 6,000 பேரும் 'ஓட்'போட எவ்வளவு நேரமாகும் என்பதைக் கணக்கிட்டுப்பாருங்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே அங்கேயிருந்த ஒரு டைரக்டருக்காவது பங்குதாரர்களின் அவதியைப் போக்க மனம் வரவில்லை. எப்படியாது அந்தக் கூட்டம் கலைந்துவிட்டால், அவர்களுடைய ஆட்களை மட்டும் தேக்கி நிறுத்திக்கொண்டு வெற்றிபெற்றுவிடலாம் என்ற கருத்தின் அடிப்படையில் காத்திருந்தனர்.

வந்திருந்த எவரும் அசைவதாகத் தெரியவில்லை, அன்றைய நிகழ்ச்சியின் தலைவர் திரு. ஷாகுல் ஹமீது இரவு 7½ மணிக்குவெளியே வந்து பார்த்தபோதுதான் உண்மை நிலையை உணர்ந்தார் ; தேர்தலை நாள் குறிப்பிடும் வரையில் ஒத்திப்போட்டார். எல்லோரும் கலந்த பிறகு, 14—5—55 அன்றைய கூட்டத்தைப் போல நடத்திவிடுவார்களோ என்ற சந்தேகத்தால் அதை எழுதி வாங்கிக் கொண்டோம். ஒரு எம்.எல் ஏ.-யும், எம். பி.-யும் எதிலும் கையெழுத்துப் போடத் தயாராக இருக்கும்போது எதைத்தான் துணிந்து செய்யமாட்டார்கள் ?

டிச. 4-ந்தேதி 'ஓட்' உரிமை

4—12—55 ஞாயிற்றுக் கிழமையன்று அந்தத் தேர்தலை நடத்தப் போகிறார்களாம்.

காலை 9-மணியிலிருந்து 1-மணி வரையிலும், மாலை 2-மணியிலிருந்து 6-மணி வரையிலும் தேர்தல் நடக்கும் எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் தடவை அவர்கள் இடையூறு விளைவிக்க முடியாதபடி முன்கூட்டியே ஏற்பாடுகளைப் பற்றிய வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம். வழக்கு மன்றம் ஏறியாவது எத்தர்களின் பித்தலாட்டங்களைத் தவிடு பொடியாக்குவோம் என உறுதி கூறுகிறோம்.

9-லிருந்து 15 ! அவைதான் நம்முடைய நண்பர்களின் வரிசை எண்கள் ! கே. கே. எம். பணிக்கரிலே தொடங்கி என். ராஜேந்திரன் முடிய இருக்கும் ஏழு பேருக்கும் 'ஓட்டுப்' போடுங்கள் என வேண்டுகிறோம். ஒருவர் ஏழு பேருக்கு ஓட்டுப் போடலாம்.

இன்றே உங்கள் 'ஷேர் சர்ட்டிபிகேட்'டுகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் ; இல்லாதவர்கள் உடனே வாங்கிக்கொள்ளுங்கள்; எவரிடமும் 'ஷேர் சர்ட்டிபிகேட்'டைக் கொடுத்துவிடாதீர்கள் ; 'ஷேர் சர்ட்டிபிகேட்'டைக் காண்பித்தால்தான் 'ஓட்' போட அனுமதிப்பார்கள்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரையும் ஆதரவு தர வேண்டுகிறோம்.

எஸ். ஆர். எம். யூ.

மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்கட்கு

"தென்பகுதி இரயில்வே மென்ஸ் யூனியன் மத்திய நிர்வாகக் குழு விசேடக் கூட்டம், 4—12—55-ல், விழுபுரத்தில் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்டவைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் :—

1. கூட்டுப் பொதுச்செயலாளர் திரு. சச்சிதானந்தம் தன்னிச்சையாகவும், சர்வாதிகாரதோரணையிலும் நடந்துகொள்ளுவதாலும், பொன்மலை, திருச்சி கிளைகள் யூனியன் கொள்கைக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுவதாலும், எவ்வளவோ முயற்சித்தும் எதிர்பார்த்த அளவிற்கு அவர்கள் திருந்தவில்லை என்பதாலும், தாம் பொதுச்செயலாளர் பதவியினின்றும் விலகிக்கொள்ளுவதாக திரு. வ. வீராசாமி எம் பி., அவர்கள் எழுதிய விலகல் கடிதம் பற்றி விவாதித்தல் ;
2. பொன்மலை, திருச்சி, பெரம்பூர் கிளைகள் மீதும், கூட்டுப் பொதுச்செயலாளர் மீதும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி யோசித்தல் ;
3 கூட்டுப் பொதுச்செயலாளர் மீது செங்கற்பட்டு கிளை கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து யோசித்தல் ;
4. யூனியன் வரவு-செலவு கணக்குப் பரிசீலனை செய்தல் ;
5. 'தொழில் முரசு' இதழைத் தொடர்ந்து வெளியிடுவது பற்றி யோசித்தல் ;

"எல்லாக் கிளைச் செயலாளர்களும், தலைவர்களும், மத்திய சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் கலந்துகொள்ளும்படி பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்,"

—என்று, எஸ். ஆர். எம். யூ. மத்திய சங்கத் தலைவர் தோழர் சீ. இராகவானந்தம் கேட்டுக் கொள்கிறார்.

மதுரை நகர் கார்ப்பொரேஷன் ஆகும்?

சென்னை, நவ. 30—

மதுரை நகரை, ஒரு கார்ப்பொரேஷன் ஆக்குவது பற்றிய பிரச்சினை, பரிசீலனையிலிருந்து வருவதாக, அமைச்சர் எஸ். எஸ் இராமசாமி சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய வர்த்தகர்களின் 'விடுதலை ஆர்வம்'

கோவாவிற்கு திருட்டுத்தனமாக சாமான்கள் அனுப்புகின்றனராம்!

பண்டித நேருவின் கண்டனம்

புதுடில்லி, நவ. 30—

'கோவா விடுதலை பெற பொருளாதார முட்டுக்கட்டை போன்ற நடவடிக்கைகளே போதுமானது' என்று இந்தியப் பேரரசு கருதி செயலாற்றி வருகிறது.

இந்தியப் பேரரசுடன் இந்திய வர்த்தகர்கள் எத்தனை தூரம் ஒத்துழைத்து வருகின்றனர் என்பதற்கு மக்கள் சபையில் பண்டித நேரு தந்திருக்கிற ஒரு விளக்கம் சான்றாக அமைந்திருக்கிறது.

ஏடன் வழியாக கோவாவிற்கு, இந்திய வர்த்தகர்கள் பொருள்களை ஏற்றுமதி செய்து வருகின்றனராம்.

இப்படிச் செய்யும் வர்த்தகர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பண்டித நேரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

தோழர் காமத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர், பம்பாய் சர்க்காரும், இந்திய சர்க்காரின் இலாகாக்களும், அம்மாநிரி பம்பாயிலிருந்து ஏடன் வழியாகக் கோவாவிற்கு ஏற்றமதியாகும் பொருள்களைக் கண்காணித்து வருகின்றனர் என்றும் தெரிவித்திருக்கிறார்.

வேறொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், வெளிவிவகார இலாகா உதவி மந்திரி ஏ. கே. சந்தா, கடந்த இரண்டு மாதங்களில் கோவாவிற்குள் நுழைய எத்தனித்த 170 பேர் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும், ஆயுதம் தரித்த போலீசார், கோவா எல்லையில் நிறுத்தப்பட்டிருப்பதாயும், அவர்கள், பொருள்கள் கள்ளத்தனமாக கடத்தப்படாமலும், நபர்கள் கோவா எல்லைக்குள் நுழையாமலும் பார்த்துக் கொள்கின்றனர் என்றும், கோவா எல்லைக்குள் நுழைந்தோரை போர்ச்சுகீசியர் கைது செய்து பல ஆண்டு தண்டனை தந்திருப்பது குறித்து இந்திய சர்க்கார் எதும் செய்ய இயலாதவர்களாயிருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தேவிகுளம்—பீர்மேடு கோரிக்கை

முதலமைச்சர் காமராசர் விளக்கம்

சென்னை, நவ. 30—

"மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு வட்ட மேசை மாநாடுகள் கடந்த காலத்தில் வெற்றி தருவதாயிருக்கவில்லை; ஏனெனில், தொடர்புடையவர்கள் தங்கள் தங்கள் கோரிக்கையையே வலியுறுத்தினர்; 'விட்டுக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதல்' என்ற கொள்கையை அனுசரிக்கவில்லை,"

என்று, முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறார்.

"எனவே, தேவிகுளம், பீர்மேடு விவகாரத்திற்கும் இத்தகு மாநாடு பயன்தருவதாயிருக்காது," என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

ஆந்திர சட்டசபை, எல்லைத் தகராறுகள் குறித்து நிறைவேற்றியுள்ள தீர்மானம் தெரியும் என்றும், இதன்படி பார்த்தால் ஆந்திராவுடன் சென்னைக்கு உள்ள எல்லைத் தகராறைத் தீர்க்க ஒரு எல்லைக் குழுவை நியமிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் காமராசர் கருத்தறிவித்திருக்கிறாராம்.

தேவிகுளம், பீர்மேடு தகராறு குறித்து பேச்சு நடத்திவருமாறு காங்கிரஸ் மேலிடம் இன்னும் அழைப்புத் தரவில்லை என்றும், இன்னும் சில நாட்களில், தான் டில்லி செல்லக்கூடும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

வேலியே பயிரை மேய்கிறது!

சென்னை, நவ. 29—

இந்த நடைமுறை ஆண்டில் (1954—55) மதுவிலக்குக் குற்றங்களுக்காக 27 சர்க்கார் சிப்பந்திகள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர் என்ற தகவலை, சென்னை சட்டசபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மதுவிலக்கு அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சிப்பந்திகளில் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த சிலரும் அடங்கியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

6,500 கிராமங்களுக்கு மின்சார வசதி

முதல் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் எல்லா மாநிலங்களிலுமாக மொத்தம் சுமார் 6,500 கிராமங்களுக்கு மின்சார வினியோக வசதிகிடைக்குமென்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கென முதல் திட்டக் காலத்தில் மத்திய அரசாங்கம், பல்வேறு மாநிலங்களுக்கும் சுமார் 21 கோடி கடன் கொடுத்துள்ளனவென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

போர்ச்சுக்கல் மந்திரியின் வீம்பு

நியூயார்க், டிச. 1—

"இந்தியாவிலுள்ள தனது பகுதிகளை விட்டுச் செல்லவேண்டுமென்றநோக்கம் போர்ச்சுக்கலுக்குக் கிடையாது,"

என்று, போர்ச்சுக்கீசிய அயல்நாட்டு விவகார அமைச்சர் குன்ஹா என்பார் தெரிவித்துள்ளதாகப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

"மற்ற நாடுகளையும், மக்களையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கின்ற ரஷ்யாவிற்கு, நாகரீகத்தைப் பற்றிப் பேசுவதற்கு வாய் ஏது ?"

என்றுகூட அவர், ரஷ்யப் பிரதமர் புல்கானின் சென்னையில் 'கோவா பிரச்சினை நாகரீக உலகிற்கே அவமானம்' என்று குறிப்பிட்டது குறித்துக் கேட்கப்பட்டபோது கூறினாராம் !

அன்புள்ள தோழர் டிட்டோ அவர்களே !

பெல்கிரேட், நவ. 29—

யூகோஸ்லேவிய 'பெடரல்' குடியரசின் 10-வது ஆண்டு விழாவையொட்டி, ரஷ்யத் தலைவர் மார்ஷல் க்ளெமென் டி வெரோஷிலாவ் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அன்புள்ள தோழர் டிட்டோ அவர்களே !

நீங்களும், யூகோ மக்களும் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதிலும், நமது சோதர உறவை பலப்படுத்துவதிலும், உலகத்தில் உள்ள சமாதானம் விரும்பும் நாடுகளுடன் கூட்டுறவு கொள்வதிலும் மேலும் வெற்றி பெற வேண்டுமென நான் வாழ்த்துகிறேன்."

ஆந்திரத்துடன் எல்லைத் தகராறு

'தீர்த்து வைக்க குழு நியமிக்கவும்'

காங்கிரஸ் மேலிடத்திற்கு காமராசர் கடிதம்

சென்னை, டிச. 1—

ஆந்திர—சென்னை மாநிலங்களுக்கிடையே செங்கற்பட்டு வடஆற்காடு, நெல்லூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு எல்லைக் குழுவை நியமிக்குமாறு காங்கிரஸ் மேலிடத்திற்குக் கடிதம் எழுதுவதென முதன் மந்திரி காமராசர் முடிவு செய்திருக்கிறாராம்.

ஆந்திர சர்க்கார் இந்த எல்லைத் தகராறு குறித்து சென்னை சர்க்காருக்கு எழுதியுள்ள கடிதத்தை மந்திரிகள் கூடி விவாதித்த பின்பே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

ஒசூர் வட்டம் தங்களுக்கு வேண்டுமென ஆந்திரர் கோருகின்றனர்; கோலார் மாவட்டத்தை மைசூரிடமிருந்து பெற்றால், அப்போது ஒசூரும் ஆந்திரத்துடன் தொடர்புடைய பகுதியாகும் என்று அவர்கள் கூறுகின்றனர்; ஆனால், கோலார், ஆந்திரத்திற்குக் கிடைத்த பின்னர் வேண்டுமானால், ஒசூர் பற்றிப் பேசலாம் என சென்னை சர்க்கார் கருதுகின்றனர்.

காலங் கடந்த கூச்சல்!

எர்ணாகுளம், நவ. 30—

"மாநில புது அமைப்புத் திட்டத்தினை இன்னும் 15 ஆண்டுகளுக்கு ஒத்திப்போட வேண்டும் என்ற ஆச்சாரியாரின் கூச்சல் மிகக் காலங் கடந்தது,"

என்று, காங்கிரஸ் பொதுச்செயலாளர் மாதவன் நாயர் தெரிவித்திருக்கிறார்.

சேரிகள் அபிவிருத்தி

பணம் கோரி திட்டக் குழுவுடன் போராடுகிறாராம்!

மந்திரி சுப்பிரமணியம் வாய்வீச்சு

சென்னை, நவ. 30—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நகரில் உள்ள எல்லா சேரிகளையும் அபிவிருத்தி செய்துவிட முடியும் என சென்னை சர்க்கார் நம்புகிறது,"

என்று, மந்திரி சுப்பிரமணியம் மேல் சபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காகப் போதுமான பண உதவி தருமாறு திட்டக் குழுவினருடன் தாங்கள் போராடி வருவதாயும் மந்திரி விளம்பியிருக்கிறார்.

எதிர்க்கட்சியினர் வெளி நடப்பு!

ஐதராபாத் மந்திரியின் கூற்றுக்கு எதிர்ப்பு

ஐதராபாத், நவ. 29—

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள போதாயில் உள்ள நிசாம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் மீது சில நாட்களுக்கு முன்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்து உதவி போலீஸ் மந்திரி சீனிவாசராவ் எகில்கார் தவறான தகவல் தருவதை எதிர்த்து, ஐதராபாத் சட்டசபையில் எதிர்க்கட்சியினர் முழுவதும் இன்று வெளி நடப்பு செய்திருக்கின்றனர்.

எல்லா எதிர்க்கட்சியினரும் வெளியேறிவிடவே, சபையில் கோரமில்லாது போனமையால் சபை ஒத்திவைக்கப்பட்டது

57 யானைகள் ஏற்றுமதி

புதுடில்லி, டிச. 1—

கடந்த ஆண்டில் இந்தியாவில் இருந்து 57 யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும், அவற்றின் மதிப்பு மொத்தம் ரூ. 1,52,000 என்றும் வர்த்தக மந்திரி கார்மார்க்கர் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் சபைகள் யூனியன் மாநாடு

செஞ்சீனா அழைக்கப்படும்

புதுடில்லி, டிச. 1—

பாங்காங்கில் நடைபெறவிருக்கிற மக்கள் சபைகள் 'யூனியன்' மாநாட்டில் கலந்து கொள்வதற்கு சீனாவையும் அழைப்பது என்று ஆறு மணி நேரம் மிகக் காரசாரமாக விவாதித்துவிட்டு, 'யூனியன்' செயற்குழு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

அரிசி விலை வீழ்ச்சியைத் தடுக்க இந்தியப் பேரரசு நடவடிக்கை?

சென்னைக்கு விலை நிர்ணயம்?

அரிசி விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்கு, நெல் சாகுபடியாகும் மாநிலங்களிலுள்ள குடியானவர்களிடமிருந்து மணங்கு ரூ. 6–14–0 வீதம் நெல் வாங்கலாமென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம். அரிசி விலை மணங்கு ரூ 11–0–0.

சென்னை உட்பட அரிசி விளையும் 11 மாநிலங்களுக்கு டில்லியின் முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய சர்க்கார் முதலில் அரிசிக்கு விலை நிர்ணயித்தனர். ஆனால் குடியானவர் நெல்லைத்தான் விற்பனைக்குக் கொண்டு வருவதாலால் அரிசிக்கு விலை நிர்ணயிப்பது அவர்களுக்கு உதவிகரமாயிருக்காதென மாநிலங்கள் தெரிவித்தன; எனவே, நெல்லுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நெல் விலை மணங்கு ரூ. 6–14–0க்குக் குறையும்போது, விலை வீழ்ச்சியைத் தடுக்க மாநில சர்க்கார்கள் மேற்கண்ட விலையில் நெல் வாங்குவார்.

சென்னை சர்க்கார்—நெல்லுக்கு ரூ 7 விலை நிர்ணயிக்குமாறும், உத்தரப் பிரதேசம்—ரூ. 6 ... நிர்ணயிக்குமாறும் தெரிவித்திருந்தன; சமரச ஏற்பாடாக ரூ 6–14–0 நிர்ணயிக்கப்பட்டது.

பீகார் ஆர்ப்பாட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கோரினர்; ஆனால், அவர்களின் பிரதிநிதிகள் முதன் மந்திரியை சட்டசபைக் கட்டிடத்தில் சந்தித்தபோது, அவர், தான் ஒரு நிர்வாகி என்ற முறையில் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்து ஒரு 'முன்மாதிரி' ஏற்படுத்திவிட்டால், அதன் விளைவாக பல ஆர்ப்பாட்டக் கோஷ்டிகளைச் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே, தன்னால் அது இயலாது என்றும், வேண்டுமானால் நிதி மந்திரியை அனுப்பி வைப்பதாயும் கூறினார்; ஆனால், நிதிமந்திரி ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்திக்க வந்தபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் முதன் மந்திரியையே பார்க்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

இறுதியாக பீகார் முதன் மந்திரி டாக்டர் சின்ஹா வந்து ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்து, அவர்களது கருத்துக்களை அறிந்து சென்றிருக்கிறார்.

மாநிலக் குழுவின் அறிக்கை குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கொண்டுள்ள கருத்து ஏற்கனவே தெரியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிறப்புச் சொற்பொழிவு

4-12-55 காலை 10 மணிக்கு, வேலூர் நேஷனல் டாக்கீசில் தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக, தோழர் முல்லை சத்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு.கருணாநிதி, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். நன்கொடை: ரூ. 1, அணா 8, 4.

—வ. ஆ. மாவட்ட தி. மு. க.

கழகக் கூட்டம்

வேலூர்—தோட்டப்பாளையம்

தி. மு. க. (கிளை) 4-ம் ஆண்டு விழா 4—12—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: இரா. புகழேந்தி

பேசுவோர்:

எம். எஸ். இராமசாமி

எஸ். எஸ். தென்னரசு

சென்னை—16-வது வட்ட தி.மு. கழக உறுப்பினர்கட்கு

4—12—55 மாலை 4 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி மு கழகப் பணிமனையில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை—35-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

4—12—55 காலை 8-30 மணி அளவில் கழக இல்லத்தில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது மாவட்ட உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுத்தல், கிளைக் கழக இல்லத்தைப் புதுப்பித்தல், ஆண்டு வரவு-செலவு கணக்கு சரிபார்த்தல் மற்றும் கழக ஆக்கவேலைகள் குறித்து ஆலோசித்து ஆவன செய்தல் ஆகியவை குறித்து ஆராயப்படும்.

திருப்பூர் தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

4—12—55 காலை 10½ மணிக்கு, திருப்பூர் நகர தி மு. கழக செயற்குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். உறுப்பினர் சேர்ப்பது, மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பு, பொங்கல் விழாக் குழு அமைப்பு ஆகியவை பற்றி ஆராயப்படும்.

உதகை தி. மா. மு. கழக உறுப்பினர்கட்கு

4—12—55 காலை 11 மணிக்கு, அண்ணா முரசொலி மன்றத்தில் உதகை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெறும். இவ்வாண்டின் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். மாணவர் முன்னேற்றக் கழகம் சீரிய முறையில் பணியாற்றுவதற்கும் மத்தியக் கழகத்தோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய வழிவகைகள் பற்றியும் ஆராயப்படும்.

மதுரையில் கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பக ஆண்டு விழா

4—12—55 மாலை 6 மணிக்கு, மதுரை 31-வது வட்டம் மதுரை சிந்தாமணி ரோடில் உள்ள மேற்படி படிப்பகத்தின் முன்னால், தோழர் அ. குருசாமி தலைமையில் படிப்பக 2-வது ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் பி. கே. சேதுராமன் கொடியேற்றுவார். தோழர்கள் என் எஸ். இராசா, கே. எஸ். சுந்தானம், எஸ். முத்து ஆகியோர் முறையே 'திராவிட நாடு', நடராசன், சௌந்திரபாண்டியனார் படங்களைத் திறந்துவைப்பர். தோழர் சிற்றுளி அ. சுப்பிரமணியம், பி சமதர்மம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

வ. உ. சி. நினைவு நாள்

3-12-55 மாலை 6-30 மணிக்கு சென்னை இளைஞர் கழகத்தில் (எண் 10, மாணிக்க செட்டித் தெரு, சூளை), தோழர் எம். என். முத்துக்கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர் ஆதி. தேவநாதன் பேசுவார்.

விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!

திராவிடர் நாட்குறிப்பு (டயரி) 1956

இந்த டயரியில்,

தி மு கழக வரலாறு, சட்டதிட்டங்கள், செயற் குழு, பொதுக் குழு, 1120 கிளைக் கழக விவரங்கள், பேச்சாளர் முகவரிகள், தபால் தந்தி, பத்திரப் பதிவு, வருமான வரி, விற்பனை வரி, பக்கத்துக்கு ஒன்று விதம் உலக அறிஞர்களின் புதிய பொன்மொழிகள் உண்டு.

அழகிய முழு காலிகோ பைண்டு

500 பக்கம் விலை ரூ. 1

விற்பனையாளர்கள் கழிவு 20 சதவிகிதம்; செலவு தனி

முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்

அண்ணா, நெடுஞ்செழியன், பெரியார் படங்கள் **20X15** அளவில் கிடைக்கும்

விலை: ஒன்றுக்கு **0—5—0;** விற்பனையாளர் கழிவு **20** சதவிகிதம்

கருணாநிதி, கண்ணதாசன், அம்பழகன், சிற்றரசு, ஆசைத்தம்பி, இளங்கோ, கல்யாணசுந்தரம், மதியழகன், பாரதிதாசன், என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, நெடுஞ்செழியன், அண்ணா, பெரியார் படங்கள் 15X10 அளவில் 1-க்கு 0-2-0. 100-க்கு ரூ. 8-8-0. பலவிதமான பொங்கல் வாழ்த்துக்கள் 100-க்கு ரூ. 3-0-0 முதல் ரூ. 8-0-0 வரை எம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு: அஞ்சல்தலை இருப்பில் இல்லை தெரிவிக்கவும்

'போர்வாள்', பவழக்காரத் தெரு, சென்னை

50-ஆண்டுகளாகப் பென்ஷன் பெற்றவர்!

106-வது வயதில் காலமானார்

கும்பகோணம்—

அரை நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமாக சர்க்கார் 'பென்ஷன்' பெற்றுவந்த ஓய்வு பெற்ற போலீஸ்காரரான பத்மநாப ராவ் என்பவர், தம்முடைய 106-வது வயதில், கும்பகோணத்தை அடுத்துள்ள அனுமந்த கிராமத்தில் இயற்கையெய்தினார் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

சென்னை மோட்டார் தொழிலாளர் சங்கம்

வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

சென்னை, நவ 29—

மாதச் சம்பளம், தீபாவளி போனஸ், வருடாந்திர லீவு நாள் ஆகியவை போன்ற சில தகராறுகளையொட்டி, சென்னை ஏ. டி. (எம்) கம்பெனி லிமிடெட் மோட்டார் பஸ் தொழிலாளர்கள் தாங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருந்தனர்.

இவர்களுடைய தகராறை விசாரித்த லேபர் அதிகாரியின் முயற்சியால், தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஒத்துக்கொண்டதையொட்டி வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு விட்டது.

அந்தக் கம்பெனியைச் சேர்ந்த சுமார் 50 மோட்டார் வண்டிகள் நகரிலிருந்து பல பகுதிகளுக்கும் விடப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

ஒத்திவைப்பு

3—12—55 அன்று மாலை திருவொற்றியூர் பெரியசாலையில் வள்ளுவர் இளைஞர் மன்றச் சார்பில் தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ தலைமையில், தோழர்கள் அன்பழகன், கண்ணதாசன், சுரதா ஆகியோர் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பொதுக்கூட்டம், மழையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

4—12—55 மாலை 6 மணிக்கு இராயபுரத்திலுள்ள வடசென்னை தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றத்தில் நடைபெறும் தோழர் ச. பாலன் தலைமை தாங்குவார். தோழர்கள் இரா. புவியரசு, இரா. சுந்தரமூர்த்தி, தாஸ் ஆகியோர் பல தலைப்புக்களில் பேசுவர். சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி கலந்துகொள்வார்.

* * *

3—12—55 மாலை 6½ மணிக்கு, வடசென்னை குறள் நெறிக் கழக அறையில் தோழர் கி. தியாகராசன் தலைமையில், 'இந்தி தேசிய மொழியா?' என்பது குறித்த விவாதம் நடைபெறும்.

குன்றக்குடிகளார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாத் தலைவர் திரு. எஸ். பி. சேதுராமன் அனைவரையும் வரவேற்றார்.

குன்றக்குடி அடிகளார் பேசுகையில் கூறியதாவது:—

"பழங்காலத் தமிழர்கள் பொருள் ஈட்டியதெல்லாம் பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான்; தன்னிடம் வந்து கேட்பவர்களுக்கு இல்லையென்று கூறாதவன், தலைவியிடம் காணும் இன்பத்தை விட அதிக இன்பம் அடைகிறான்.

"ஊருக்கு அழகு நகரசபையினாலோ அல்லது அழகிய பூங்காவினாலோ அல்ல; ஊருக்கு அழகு சான்ற கொள்கை உடையவர்கள் இருப்பது தான்.

"மோட்ச லோகத்திற்கு மக்களைக் கொண்டு போவதைவிட மோட்சலோகத்தையே இங்கு கொண்டுவர வேண்டும்.

"இன்றைய தமிழ் மக்கள் பண்டைய சங்க கால மக்களைப்போல வாழவேண்டும். அக்காலத் தமிழகத்தைப் போல் இன்றையத் தமிழகத்தை உண்டாக்கவேண்டும். அந்தத் தமிழகத்தை உருவாக்குகிற பணியே நமது மூச்சாக வேண்டும். சாதி–சாத்திர–குலகோத்திர பற்று இல்லாமல் புதிய தமிழகத்தை உண்டாக்கவேண்டும். தமிழகம் தன்னாட்சி பெறவேண்டுமானால், திருக்கோவிலிலுள்ள நவக்கிரகங்களைப் போலில்லாமல், எல்லோரும் ஒன்றுபட்ட மனத்தினராய் செயல்புரிய வேண்டும்.

'ஒவ்வொருவரும், தினமும் மூன்று தடவை திருக்குறளைப் பற்றியும், தமிழன் நாகரீகத்தைப் பற்றியும் தனது நண்பர்களிடம் பேசுவது என்ற செயலை எடுத்துக்கொள்ளவேண்டும்."

திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில், உயர்நிலை வகுப்புகளில் ஆண்கள் பகுதியில் கே. எல் முத்துவீரும், பெண்கள் பகுதியில் திருமதி கண்ணம்பாளுக்கும் முதற் பரிசு வழங்கப்பட்டது.

இடைநிலை வகுப்புகளில் எஸ். இராசகோபாலன் முதற்பரிசு பெற்றார்.

ஆர் சுபத்திரா, என். வள்ளியம்மை, சுப. உண்ணாமலை ஆகியோர் தொடக்கப்பள்ளி வகுப்புகளின் சார்பாக பரிசு பெற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.